[2018 ஜூலை 5

275—

கலைக் கல்லூரி

***22808—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் மற்றும் கீழ்பெண்ணாத்தூரில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் மற்றும் கீழ்பெண்ணாத்தூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவண்ணாமலை மாவட்டம் விவசாயிகள் நிறைந்த ஒரு பிற்பட்ட மாவட்டமாகும். திருவண்ணாமலை அரசுக் கல்லூரியில் சேருவதற்கு மாணவர்களிடமிருந்து வருடத்திற்கு 10,000 விண்ணப்பங்கள் வருகின்றன. ஆனால், 6,300 விண்ணப்பங்களில் 1,400 பேர்தான் U.G.—ல் சேருகிறார்கள். P.G.—ல் 2,500 பேருக்கு, 1,000 மாணவர்கள்தான் சேரக்கூடிய நிலை உள்ளது. அதேபோல, செய்யாறில் உள்ள கல்லூரியில் 6,000 விண்ணப்பங்களுக்கு 1,790 பேர்தான் சேருகிறார்கள். அதைப்போல, தென்னாங்கூரில் இருபாலர் கல்லூரிகள் இருக்கின்றன; அதிகமான விண்ணப்பங்கள் வருகின்றன. ஆனால், மாணவர்கள் அரசுக் கல்லூரிகளில் சேராமல் தனியார் கல்லூரிகளை நாடக்கூடிய நிலை இருக்கிறது. கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, ஒரு பிற்பட்ட தொகுதியாக இருக்கின்றது. மத்திய அரசாங்கம் இன்றைக்கு கல்விக்காக 2 இலட்சம் கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்று சொல்கிறீர்கள். நிதி பெற்று, அரசுக் கல்லூரிக் இல்லாத*

2018 ஜூலை 5]

ஒவ்வொரு தொகுதியிலேயும் அரசுக் கல்லூரிகள் தொடங்கப்படுமா? அடுத்து, பெண்கள் கல்லூரிகள். இன்றைக்கு பெண்களை படிப்பதற்காக வீட்டை விட்டு அனுப்ப முடியாத ஒரு சூழ்நிலையால், அவர்களது கல்வி தடைபடுகிறது. இங்கே உள்ள கல்லூரிகள் co-education ஆக இருக்கின்றன. ஆகவே, கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் ஓர் அரசு பெண்கள் கல்லூரியைத் தொடங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அவருடைய மாவட்டத்தில் இரண்டு அரசுக் கல்லூரிகள் உள்ளன. முன்பு உறுப்புக் கல்லூரியாக இயங்கிக் கொண்டிருந்த ஒரு கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மாற்றியிருக்கின்றார். ஒரே ஆண்டிலே ஒட்டுமொத்தமாக 41 உறுப்புக் கல்லூரிகளை 152 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அரசுக் கல்லூரிகளாக மாற்றியிருக்கின்றார். ஆக, அந்த மூன்று கல்லூரிகளிலும், கடந்த 2017–2018 ஆம் கல்வியாண்டினைப் பார்க்கின்றபோது, ஒப்பளிக்கப்பட்ட இடங்களிலே பூர்த்தியான இடம் போக, மீதி 158 இடங்கள் இருக்கின்றன. அதேவேளையில், தற்போது 23 கல்லூரிகள் சுய நிதிக் கல்லூரிகளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலும்கூட 2,667 மாணவர்கள் சேர்க்கைக்கான இடங்கள் காலியாக இருக்கின்றன. இருப்பினும், அந்தப் பகுதியிலே பெண்களுக்காகவென்று தனியாக ஒரு கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். தற்போது, ஒப்பளிக்கப்பட்ட இடங்களிலும் காலியிடங்கள் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டவாறு, கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் மற்றும் கீழ்பெண்ணாத்தூரில் புதிய அரசு கலைக் கல்லூரி தொடங்குவதற்கு தற்போது தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2018 ஜூலை 5

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே உயர் கல்வியிலே தமிழ்நாடு 46.9 சதவிகித அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அரசுக் கல்லூரிகளில் ஒரே நேரத்தில் 2 shifts என தமிழ்நாடு முழுவதும் உயர்த்தியதுதான். அதன் காரணமாகத்தான், உயர் கல்வியிலே நாம் உயர்ந்திருக்கிறோம். ஆனால், இன்றைக்கு பத்திரிகையில் வருகிற செய்திகளைப் பார்த்தோமென்றால், 200–க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளை மூடுகிறார்கள், 400 பி.எட். கல்லூரிகளை மூடுகிறார்கள் என்று வருகின்றன. அதேபோன்று, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர்கள் சேரவில்லை என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இந்த அரசு இதைக் கருத்திலே கொண்டு, தலைவர் கலைஞர் அவர்கள் எவ்வாறு ஒரே நேரத்தில் எல்லா கல்லூரிகளுக்கும் அந்த அனுமதியை அளித்தார்களோ, அதேபோன்று தனியார் கல்லூரிகளில், யார், யாரெல்லாம் தகுதியுடையவர்களோ, அவர்களுக்கெல்லாம் ஒரே நேரத்தில் உயர் கல்விக்கு அனுமதி அளித்தால், Arts & Science Colleges–ஐ கொடுத்தால், அனைவரும் அதிலே சேர்ந்து உயர் கல்வி பயிலும் நிலை ஏற்பட்டு, நம்முடைய மாநிலம் உயர் கல்வியிலே பின்தங்காமல் இருக்கக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்துச் செய்வதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், உயர் கல்வித் துறையிலே பணிபுரியக்கூடிய முதல்வர்களுக்கு J.D. பதவி அளிக்கப்படாமல் இருக்கிறது, Joint Directors–க்கு பதவி உயர்வு அளிக்கப்படாமல் இருக்கிறது என்ற குறையும் இருக்கிறது. அதற்கும் ஆவன செய்வதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொறியியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் மூடப்படுகின்றன என்பதைச்

2018 ஜூலை 5]

கட்டிக்காட்டினார்கள். மாணவர்களுடைய சேர்க்கையைப் பொறுத்தவரையில், பொறியியல் கல்லூரிகளில் 1 இலட்சத்து 52 ஆயிரம் மாணவர்கள் வருடந்தோறும் சேருகிறார்கள். கடந்த ஆண்டு, அரசு ஒதுக்கீட்டின் மூலமாக 1 இலட்சத்து 2 ஆயிரம் மாணவர்களும், Management Quota வாயிலாக 50 ஆயிரம் மாணவர்களும் சேர்ந்திருக்கிறார்கள். கல்லூரிகள் கூடுதலாக இருக்கின்றபட்சத்தில், தரம் குறைந்த கல்லூரிகளில் மாணவர்களுடைய சேர்க்கை இல்லை என்பதால், அதை மாற்றியமைக்கின்ற வகையிலே கல்லூரிகளை மூடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே மாணவர்கள் தொடர்ந்து உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, கடந்த காலங்களில் 65 கல்லூரிகளைத் தோற்றுவித்தார்கள்; அதே வழியில் வந்த அண்ணன் எடப்பாடியார் அவர்களும் 11 கல்லூரிகளைத் தோற்றுவித்தார்கள்; மொத்தம் 76 கல்லூரிகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு, அனைவருக்கும் உயர் கல்வி வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 1,321 புதிய பாடப் பிரிவுகளும் தோற்றுவிக்கப்பட்டு, அனைவரும் கல்லூரிகளிலே சேருகின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

இந்தக் கல்வியாண்டிலும்கூட, அனைவருக்கும் உயர் கல்வி வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் 264 புதிய பாடப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும், 210 கோடி ரூபாய் நிதி, கட்டடம் கட்டும் பணிக்காக வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டத்தில்கூட, 2 கல்லூரிகளுக்கும் சேர்த்து, 15 வகுப்பறைகள், 3 ஆய்வகங்கள் கட்டுவதற்கென்று கிட்டத்தட்ட 3 கோடியே 64 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு முன்பாக, 100 கோடி ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்காக ஒதுக்கியபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்திற்கு 2 கோடியே 14 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோல, RUSA திட்டத்தின் மூலமும், 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டட வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

[2018 ஜூலை 5

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கூடுதலாக பாடப் பிரிவுகளை வழங்கிய நேரத்தில், திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கக்கூடிய கல்லூரிகளுக்கும் கூடுதலாக புதிய பாடப் பிரிவுகளெல்லாம் வழங்கப்பட்டு, மாணவர்கள் சேர்க்கைக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அதிகம் வருகின்றன என்பது உண்மை. செய்யாறு கல்லூரியைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் அனைத்தும் முழுமையாக பூர்த்தியடைந்திருக்கின்றன. அதேபோன்று, திருவண்ணாமலை கல்லூரியைப் பொறுத்தவரையில், ஒப்பளிக்கப்பட்ட 2,547 இடங்களும் முழுமையாகப் பூர்த்தியாகியிருக்கின்றன. ஆனால், தென்னாங்கூர் பகுதியிலுள்ள கல்லூரியில் மட்டும்தான் 152 இடங்கள் காலியாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட அதே கோரிக்கையை, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த, நம்முடைய மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களும், அதே மாவட்டத்தைச் சேர்ந்த செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்களும், கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஆகவே, எதிர்வரும் காலகட்டங்களில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையில் நடைபெறுகின்ற அரசு அதைப் பற்றி பரிசீலனை செய்யும். மாணவர்களுடைய சேர்க்கைக்கு எந்தவிதமான குந்தகமும் இல்லாத அளவிற்கு, அங்கு புதிய கல்லூரியைத் தொடங்குவதற்கு வாய்ப்பு இருப்பின் அதற்குரிய வழிவகைகளை அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 276, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*